பக்கங்கள்:-20

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | கார்த்திகை 15 | சனிக்கிழமை | 02.12.2023 | அதிர்வு 123

## யாழ். வேம்படியில் 115 பேருக்கு 9ஏ

(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் பிரகாரம் யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையின் 115 மாணவிகள் 9 ஏ சித்திகளைப் பெற்றுள்ளனர்.

அதேவேளை, அந்தப் 04▶

# தமிழரசுக் கட்சியில் பலருக்கு தலைமைப் பதவிக்குத் தகுதி

## இருவர் மாத்திரம் போட்டியிடவில்லை என மன்னாரில் வைத்து சுமந்திரன் தெரிவிப்பு




(எஸ்.றொசேரியன் லம்பேட், ந.லோகதயாளன்)

“இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமைப் பதவிக்கு இருவர் போட்டியிடுகின்றார்கள் என்று சொல்வது தவறு. எமது கட்சியில் பலருடைய பெயர்கள் தலைமைப் பதவிக்கு முன்மொழியப்படுகின்றன. கட்சியின் அடிப்படை உறுப்பினர்கள் 200 இற்கும் மேற்பட்டவர்கள் கூடி வாக்களித்துப் புதிய தலைவரைத் தீர்மானிப்பார்கள். எமது கட்சி ஜனநாயகக் கட்சி என்ற ரீதியில் மிகவும் ஆரோக்கியமான ஒரு விடயமாக நான் இதனைக் கருதுகின்றேன். எவர் வெற்றி பெற்றாலும் கட்சி அங்கத்தவர்களாக நாங்கள் இணைந்து செயற்படுவோம். இவரை விட்டால் வேறு ஆள் தலைமைப் பதவிக்கு இல்லை என்று வாழ்நாள் தலைவர்களையே வைத்துக் கொண்டுள்ள கட்சிகளைப் போல் அல்லாது எங்களுடைய கட்சியிலே பலருக்குத் தலைமைப் பதவிக்குத் தகுதி இருக்கின்றது.”

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். 03▶

## வைத்தியராகுவதே எனது இலட்சியம்!

சாதனை படைத்த வேம்படி மாணவி கருத்து



(எஸ்.நிதர்ஷன்)

ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகளில் அகில இலங்கை ரீதியில் இரண்டாம் இடத்தையும், தமிழ் மொழி மூலத்தில் முதலாம் இடத்தையும் பெற்ற யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையைச் சேர்ந்த அக்செயா அனந்தசயனன், ”வைத்தியராகுவதே எனது இலட்சியம்” என்று தெரிவித்தார்.

சிறந்த பெறுபேற்றைப் பெற்றமை தொடர்பில் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். 05▶

## தம்பதி கொலை: இளைஞர் கைது



(ந.லோகதயாளன்)

வவுனியா, செட்டிகுளம் பகுதியில் வயோதிபத்தம்பதியினர் வெட்டிக்கொலை செய்யப்பட்டு நகைகள் கொள்ளையிடப்பட்ட சம்பவம் தொடர்பில் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் 05▶

## அலெக்ஸ் கொலைக்கு நீதி கேட்டு போராட்டம்



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டைப் பொலிஸாரின் காட்டுமிராண்டித்தனமான சித்திரவதைகளால் நாகராசா அலெக்ஸ் என்ற இளைஞர் படுகொலை செய்யப்பட்டுள்ள நிலையில், அவரின் 04▶

## ரணில் – மோடி சந்திப்பு



இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கும் இடையில் விசேட சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

ஐக்கிய அரபு இராஜ்ஜியத்தில் டுபாயில் நடைபெற்ற ஊழ்ீ 28 உச்சி மாநாட்டிலேயே இந்தச் 05▶




மழை விட்டும் தூவானம் ஓயாதமை போல, நேற்றும் முன்தினமும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவர் தெரிவு குறித்து எழுதி விட்டு, இன்று அவை பற்றிய விடயத்தை பொத்தென்று விடாமல் ஒரு கொசுறுத் தகவலைத் தர விரும்புகிறேன்.

பத்தாண்டுகளாகக் கட்சியின் தலைவராக இருந்து, அதைக் கைவிடும் மாவை சேனாதிராஜாவுக்கு கட்சிக்குள் கௌரவமான இடம் ஒன்று வழங்கப்பட வேண்டும் 06▶

# டயனா, சுஜித், ரோஹணவுக்கு ஒரு மாதம் நாடாளுமன்றத் தடை

## ஒக்டோபர் 20 சம்பவம் தொடர்பில் சிறப்புரிமைக் குழு தீர்மானம்

(கே.பாரதி)

நாடாளுமன்ற உறுப்பினர்களான டயனா கமகே, சுஜித் சஞ்சய பெரேரா, ரோஹண பண்டார ஆகியோருக்கு ஒரு மாத காலத்துக்கு நாடாளுமன்றத்துக்கு வருவதை இடைநிறுத்த நாடாளுமன்ற நெறிமுறைகள் மற்றும் சிறப்புரிமைகள் குழு தீர்மானித்துள்ளது.


கடந்த ஒக்டோபர் மாதம் 20ஆம் திகதி நாடாளுமன்ற வளாகத்தில் ஏற்பட்ட வாய்த்தர்க்கத்தைத் தொடர்ந்து இடம்பெற்ற சம்பவத்தில் ஒருவருக்கொருவர் தாக்குதல் மேற்கொண்டனர் எனவும், தாக்க முற்பட்டனர் எனவும் இருவேறு விதமான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்ட நிலையில் நாடாளுமன்றச் சிறப்புரிமைக் குழு மேற்கொண்ட விசாரணைகளைத் தொடர்ந்து மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான தீர்மானத்தை நேற்று நாடாளுமன்றத்தில் நாடாளுமன்றச் சிறப்புரிமைக் குழுவின் தலைவரான சமல் ராஜபக்ஷ அறிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



# வட்டுக்கோட்டை இளைஞர் படுகொலை: மேலும் சில சாட்சிகள் நீதிமன்றில் பதிவு

## 5ஆம் திகதி அடையாள அணிவகுப்பு





(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் – வட்டுக்கோட்டை இளைஞர் படுகொலை வழக்கில் நேற்றும் மேலும் சில சாட்சிகள் நீதிமன்றில் தோன்றி தமது சாட்சியங்களைப் பதிவு செய்துள்ளனர்.

வட்டுக்கோட்டை பொலிஸாரால் கைது செய்யப்பட்ட நாகராசா அலெக்ஸ் எனும் இளைஞர் கொடூரமான சித்திரவதைகளுக்கு உள்ளன நிலையில் கடந்த 19ஆம் திகதி உயிரிழந்துள்ளார்.

அது தொடர்பான வழக்கு விசாரணைகள் யாழ். நீதவான் நீதிமன்றில் நீதிவான் ஏ.ஏ. ஆனந்தராஜா முன்னிலையில் நடைபெற்று வருகின்றது.

அந்நிலையில், நேற்று நடைபெற்ற வழக்கு விசாரணைகளின்போது , சில சாட்சியங்கள் மன்றில் தோன்றி தமது சாட்சியங்களைப் பதிவு செய்துள்ளனர்.

அதையடுத்து வழக்கை எதிர்வரும் 4ஆம் திகதிக்கு ஒத்திவைத்த நீதிவான், மறுநாள் 5ஆம் திகதி அடையாள அணிவகுப்பும் திகதியிட்டுள்ளார்.

இதேவேளை, இந்தச் சம்பவம் தொடர்பில் நான்கு பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் கைது செய்யப்பட்டு, கடந்த சனிக்கிழமை நீதவான் முன்னிலையில் முற்படுத்திய வேளை அவர்களை 4ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் தடுத்து வைக்க நீதிவான் உத்தரவிட்டிருந்தார்.

குறித்த நான்கு பொலிஸ் உத்தியோகஸ்தர்களாலும், ஏற்கனவே கைது செய்யப்பட்டு, யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சந்தேகநபர்கள் மற்றும் குற்றவாளிகளால் இவர்களுக்குப் பாதிப்பு ஏற்படும் எனும் காரணத்தால் நான்கு பொலிஸ் உத்தியோகஸ்தர்களும் அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.



அதேவேளை, கடந்த இரு தவணைகளிலும் சட்ட வைத்திய அதிகாரி, சிறைச்சாலை உத்தியோகஸ்தர்கள், உயிரிழந்த இளைஞருடன் கைதான மற்றைய இளைஞர், உயிரிழந்த இளைஞரின் தந்தை, சகோதரன் உள்ளிட்ட 10 பேரின் சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. .

# யாழில் கோர விபத்து

## வைத்தியர் உட்பட இருவர் உயிரிழப்பு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ். கல்லூண்டாய் பகுதியில் நேற்று இரண்டு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் வைத்தியர் உள்ளிட்ட இருவர் சாவடைந்துள்ளனர். அத்துடன் மேலும் இருவர் படுகாயங்களுடன் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

வைத்தியரும் அவரது நண்பரும் மோட்டார் சைக்கிளில் யாழ்ப்பாணம் நகரை நோக்கிச் சென்று கொண்டிருந்த போது, கல்லூண்டாய் பகுதியில் இருந்து பிரவேசித்த மோட்டார் சைக்கிள், வைத்தியரின் மோட்டார் சைக்கிளுடன் நேருக்கு நேர் மோதியுள்ளது.

அந்த மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியரும் அவரது நண்பரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

# பங்காரு அடிகளாரின் 45ஆம் நாள் நினைவு

யாழ்ப்பாணம், டிசெ. 02

மேல்மருவத்தூர் பங்காரு அடிகளார் சமாதி நிலை அடைந்த 45ஆம் நாள் நினைவை முன்னிட்டு அன்னதானமும் உதவி தேவைப்படும் மாணவர்கள் 100 பேருக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கப்படவுள்ளன.

இலங்கையின் மேல்மருவத்தூர் அருள்மிகு ஆதிபராசக்தி சித்தர்பீடம் கல்வி, சமூகநல, பண்பாடு, அறப்பணி மையம் நடத்தும் இந்த நிகழ்வு நல்லூர் வடக்கு சந்திரசேகரப் பிள்ளையார் கோவில் கலாசார மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சிறப்பு பூசை வழிபாடுகளுடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

சுவிஸ் பேர்ன் மன்ற சக்திகள், லண்டன் ஈஸ்ற்ஹாம் மன்ற சக்திகளும் லண்டன் ஓம் சக்தி அம்மா காப்பகம், அவுஸ்திரேலியா குயின்ஸ்லாந்து சக்திகளின் நிதி அனுசரணையில் நடைபெறும் இந்த நிகழ்வில் சிறப்பு பிரதிநிதிகளும் பங்கேற்கவுள்ளனர்.

## தமிழரசுக் கட்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மன்னாரில் நேற்று மாலை நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"மன்னார் – கட்டுக்கரை குளத்தில் உள்ள பிரச்சினைகள் சம்பந்தமாகவும், அதனுடன் தொடர்புபட்ட மேய்ச்சல் தரை பிரச்சினை தொடர்பாகவும் இன்று (நேற்று) காலை கட்டுக்கரை குளம் பகுதியில் ஒரு சந்திப்பு இடம்பெற்றது. அதில் சட்டபூர்வமான நடவடிக்கைகள் என்ன எடுக்கலாம் என்பது குறித்து அந்த விவசாய அமைப்புகளோடு நீண்ட ஒரு உரையாடல் நடத்தப்பட்டது.

வருகின்ற நாட்களில் சில சட்ட நடவடிக்கைகள் எடுப்பதாகத் தீர்மானித்திருக்கின்றோம். அத்தோடு மன்னார் மாவட்டத்துக்கு வந்துள்ளமையால் கட்சி உறுப்பினர்களோடும் இன்றைய அரசியல் சூழ்நிலைகள் சம்பந்தமாக ஒரு சிறு கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றுள்ளது.

எங்களுக்குத் தெரிந்தபடி அடுத்த வருடம் நாட்டிலே தேர்தல்கள் பல நடைபெறுவதற்கான வாய்ப்புகள் உண்டு.

ஜனாதிபதி எந்தத் தேர்தலை நடத்தாமல் தடுத்து வைத்திருந்தாலும் கூட 2024 செப்டெம்பர், ஒக்டோபர் மாதம் அளவிலே ஜனாதிபதியினுடைய பதவிக் காலம் முடிவடைகின்றது. அது முடிவடைவதற்கு முன் செப்டெம்பர், ஒக்டோபர் மாதம் அளவிலே ஜனாதிபதித் தேர்தல் ஒன்று நடத்தியே ஆக வேண்டும். ஆகையினாலே அதற்கு முன்னதாக நாடாளுமன்றம் கலைக்கப்படுமா? அல்லது அதற்குப் பிறகு நாடாளுமன்றத்துக்கு இன்னும் ஒரு வருட காலம் இருக்கின்றபடியால் நாடாளுமன்றம் தொடர்ந்து இயங்குமா? என்பது இப்பொழுது தெரியாமல் இருக்கின்றது.

ஆனால், எது எப்படியாக இருந்தாலும் தேர்தல் ஒன்று நிச்சயமாக இன்னும் ஒரு வருட காலத்துக்குள் நடைபெற வேண்டும். ஆகையினாலே தெற்கிலே விசேடமாக அது குறித்த பலவிதமான வியூக அமைப்புகள் ஏற்படுத்தப்படுகின்றன. இன்றைக்கு இருக்கின்ற சூழ்நிலையிலே ஒருவருக்கும் 50 சதவீதத்திற்குக் கூடுதலான வாக்குகள் எடுப்பது முடியாத ஒரு விடயமாக தோன்றுகின்ற காரணத்தால் தமிழ் மக்களுடைய வாக்குகள் சம்பந்தமாக திரும்பவும் ஒரு முக்கியத்துவம் பெற்றிருக்கின்றது.

ஆகையினாலே நாங்கள் எங்களுடைய நிலைப்பாடு குறித்து மிகவும் அவதானமாகவும், ஒரு நீண்ட கால சிந்தனையோடும் செயற்பட வேண்டியதாக இருக்கின்றது. இது எங்களுக்குக் கிடைத்திருக்கின்ற இன்னொரு சந்தர்ப்பம். ஆகையினாலே இந்தத் தேர்தல் விடயங்களில் கட்சிகளோடு நாங்கள் ஏற்கனவே பல கலந்துரையாடல்களை மேற்கொண்டிருக்கின்றோம்.

தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கான தீர்வு சம்பந்தமாக அவர்கள் நிலைப்பாடுகள் குறித்து சில பேச்சுகள் நடைபெற்றிருக்கின்றன. நாட்டிலே இருக்கின்ற மற்றப் பிரச்சினைகள் விசேடமாக பொருளாதாரப் பிரச்சினை சம்பந்தமாக நான் சென்ற ஆண்டிலிருந்து கட்சித் தலைவர் கூட்டம் ஒன்றை ஒழுங்குபடுத்தி அழைத்திருக்கின்றேன்.

அதற்குப் பல கட்சித் தலைவர்கள் வந்திருக்கின்றார்கள். சென்ற வாரமும் அதற்கு முதல் வாரமும் கூட அப்படியான ஒரு கூட்டம் ஒன்று நடத்தப்பட்டது. அதிலும் பலர் வந்து கலந்து கொண்டார்கள். அதைத் தொடர்ந்து மற்ற விடயங்கள் சம்பந்தமாகவும், வேறு கொள்கை நிலைப்பாடுகள் சம்பந்தமாகவும் நான் அடுத்த வருடத்தில் கூட்டங்களை நடத்தத் திட்டமிட்டுள்ளேன். ஒரு தனி நாடாளுமன்ற உறுப்பினராக அழைப்பு விடுக்கும்போது அவர்கள் வருகின்றார்கள்.

தேர்தல்கள் அண்மிக்கும்போது நாங்கள் இந்தக் கலந்துரையாடல்களை அடிப்படையாக வைத்து மக்களுக்கு எங்களுடைய நிலைப்பாடுகளைச் சொல்லி எடுக்க வேண்டிய நிலைப்பாடுகளை எடுக்கலாம் என்று நினைத்திருக்கின்றோம்.

மாவீரர் தின நினைவேந்தலின்போது பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தையும் உபயோகித்துள்ளனர். அது தவறான விடயம். அது சம்பந்தமாக நாங்கள் நடவடிக்கைகள் சிலவற்றை மேற்கொண்டிருக்கின்றோம். சிலர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தகவல் கிடைத்துள்ளது. இது அரசு செய்திருக்கும் மிகவும் மோசமான ஒரு விடயம். இதை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம். பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் நீக்கப்பட்டது எனச் சொல்லப்படுகின்ற வேளையிலே பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை ஒரு நினைவேந்தல்

(4ஆம் பக்கம் பார்க்க...)



## தமிழரசுக் கட்சியில்...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி..)

நிகழ்வு சம்பந்தமாக உபயோகிப்பது என்பது ஒரு பாரதூரமான விடயம். அதனை நாங்கள் கண்டிக்கின்றோம். அதற்கு எதிர் நடவடிக்கைகளையும் நாங்கள் எடுக்கவுள்ளோம்.

ஜனாதிபதி ஒட்டுமொத்தமாக அரசமைப்பை மீறிச் செயற்படுகின்றார். தற்போது அவர் நியமித்துள்ள பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் என்பவர் பலவிதமான குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாக்கப்பட்டுள்ள ஒரு நபர். அவர் இந்தப் பதவிக்குப் பொருத்தமற்றவர். ஆகையினாலே இந்த நியமனத்தையும் நாங்கள் கண்டிக்கின்றோம். இது அரசமைப்பைத் தெரிந்து கொண்டே மீறும் செயல். இதை நான் வெளிப்படையாகவே சொல்லியிருக்கின்றேன். ஜனாதிபதி ஒருவர் அரசமைப்பைத் தெரிந்துகொண்டே மீறினால் ஜனாதிபதிப் பதவியில் இருந்து அவரை நீக்குவதற்கு அது போதுமான காரணமாக கூட இருக்கின்றது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமைக்கு இருவர் போட்டியிடுகின்றார்கள் என்று சொல்வது தவறு. எங்களுடைய கட்சியின் யாப்பின் அடிப்படையிலே தலைமைப் பதவிக்குச் சிலருடைய பெயர்களை ஒரு குறித்த முறையிலே கட்சி உறுப்பினர்கள் பிரேரிக்கலாம். அப்படியாக இருவருடைய பெயர்கள் பிரேரிக்கப்பட்டுள்ளன. எங்களுடைய சம்மதத்தோடுதான் அந்தப் பெயர்கள் பிரேரிக்கப்பட்டுள்ளன.

ஆனால், மற்றவர்கள்தான் எங்களுடைய பெயர்களைப் பிரேரித்திருக்கின்றார்கள். அப்படியாக ஒன்றுக்கு மேற்பட்ட பெயர்கள் பிரேரிக்கப்படுகின்றபோது எங்களுடைய யாப்பிலேயே எப்படியாகத் தெரிவு நடைபெற வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது.

ஜனநாயகக் கட்சி என்ற அடிப்படையிலே ஜனநாயகத்திலே பரிநாம வளர்ச்சியடைந்தோர், முதிர்ச்சி அடைகின்ற நிலையிலேயே ஒரு தலைமைப் பதவிக்குப் பலர் தகுதி உடையவர்களாக இருப்பது அந்தக் கட்சியினுடைய ஒரு பலமான விடயம். பல கட்சிகளுக்கு இவரை விட்டால் வேறு ஆள் தலைமைப் பதவிக்கு இல்லை என்று வாழ்நாள் தலைவர்களையே வைத்துக் கொண்டுள்ள கட்சிகளைப் போல் அல்லாது எங்களுடைய கட்சியிலே பலருக்குத் தலைமைப் பதவிக்குத் தகுதி இருக்கின்றது.

எமது கட்சியில் பலருடைய பெயர்கள் தலைமைப் பதவிக்கு முன்மொழியப்படுகின்றன. கட்சியின் அடிப்படை உறுப்பினர்கள் 200 இற்கும் மேற்பட்டவர்கள் கூடி வாக்களித்துப் புதிய தலைவரைத் தீர்மானிப்பார்கள். மிகவும் ஆரோக்கியமான ஒரு விடயமாக நான் இதனைக் கருதுகின்றேன். எவர் வெற்றி பெற்றாலும் கட்சி அங்கத்தவர்களாக நாங்கள் இணைந்து செயற்படுவோம்." - என்றார்.

## யாழ்.வேம்படியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

பாடசாலையின் 59 மாணவிகள் 8 ஏ சித்திகளையும், 22 மாணவிகள் 7 ஏ சித்திகளையும் பெற்றுள்ளனர்.

யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அகில இலங்கை ரீதியில் இரண்டாம் இடத்தையும், தமிழ் மொழி மூலத்தில் முதலாம் இடத்தையும் பெற்றுள்ளது.

இந்தப் பாடசாலையின் அக்செயா அனந்தசயனன் என்ற மாணவியே அகில இலங்கை ரீதியில் இரண்டாம் இடத்தையும், தமிழ் மொழி மூலத்தில் முதலாம் இடத்தையும் பெற்றுள்ளார்.

## அலெக்ஸ் கொலைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

மரணத்துக்கு நீதி கோரியும் வட்டுக் கோட்டைப் பொலிஸ் நிலையத்தில் தொடர்ச்சியாக அரங்கேற்றப்பட்டு வரும் சட்டவிரோத சித்திரவதைகளை நிறுத்தக் கோரியும் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்குக் கண்டனப் போராட்டம் வட்டுக்கோட்டைச் சந்தியில் நடைபெறவுள்ளது.

இதில் அனைவரும் திரண்டு எமது எதிர்ப்பைப் பதிவு செய்வோம் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பேச்சாளர் சட்டத்தரணி க.சுகாஷ் அழைப்பு விடுத்துள்ளார்.

நீதிக்கான குரலை ஓங்கி ஒலிக்கச் செய்வோம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



## வைத்தியராகுவதே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் தேசிய ரீதியில் இரண்டாம் இடத்தையும் தமிழ் மொழி மூலத்தில் முதலாம் இடத்தையும் பெற்று தமிழ் இனத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துவதில் பெருமையாக உள்ளது.

பெறுபேற்றைக் கல்வி நடவடிக்கையில் ஒரு படிக்கல்லாகவே பார்க்கின்றேன். உயிரியல் கற்கையைத் தெரிவு செய்து மருத்துவபீடத்துக்குச் செல்ல வேண்டும் என்பதே எனது இலட்சியம்.

பெற்றோருக்கும், பாடசாலை சமூகத்தினருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

விஞ்ஞான பாடத்துக்கும், ஆங்கில இலக்கியம், சிங்களம் ஆகிய தொகுதிப் பாடங்களுக்குமே தனியார் கல்வி நிறுவனங்களுக்குச் சென்றேன்.

கணித பாடத்தை தரம் 6 முதல் தந்தையிடமேகற்றேன். சாதாரணதரமாணவர்கள் சாதாரண தரப் பரீட்சையை உயர் தரத்துக்கான சிறு வழிகாட்டாலாகக் கருதி எதிர்கொள்ள வேண்டும்.” –என்றார்.

இந்த மாணவியின் தந்தை கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் கணித விரிவுரையாளராகவும், தாய் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக முகாமைத்துவ பீட விரிவுரையாளராகவும் பணியாற்றுகின்றனர்.

## தம்பதி கொலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அதிகாலை இடம்பெற்றக் இரட்டைக் கொலை தொடர்பிலேயே சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொலைச் சம்பவ இடத்தில் சான்றுப் பொருளாகக் கிடைத்த சந்தேகநபருடையதாகக் கருதப்பட்ட கைத்தொலைபேசியை ஆதரமாக வைத்து அதே ஊரைச் சேர்ந்த 19 வயதுடைய இளைஞர் ஒருவர் யாழ்ப்பாணத்தில் வைத்து கைது செய்யப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இறந்த வயோதிபத் தம்பதியினருக்கு சந்தேகநபருக்கும் இடையில் இழுபறி நடந்துள்ளது. இதன் காரணமாக சந்தேகநபருக்கும் பல காயங்கள் ஏற்பட்டுள்ளன. அவை ஆதாரங்களாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இவர் தனியாக இந்தக் கொலையில் ஈடுபட்டாரா அல்லது வேறு யாரும் தொடர்பு உள்ளனரா போன்ற கோணங்களில் செட்டிகுளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## ரணில் - மோடி சந்திப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சந்திப்பு நடைபெற்றுள்ளது.

இரு நாட்டு பொருளாதார விவகாரங்கள் தொடர்பில் இரு தலைவர்களும் இதன்போது கலந்துரையாடியுள்ளனர்.

இலங்கையில் இந்திய அரசு முன்னெடுத்து வரும் அபிவிருத்தித் திட்டங்கள் குறித்தும் இருவரும் கலந்துரையாடியுள்ளனர் என்றும் அறியமுடிந்தது.



## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

என்று சில முக்கிய தரப்புகள் விரும்புகின்றன.

இதற்கு முன்னர் 2014 இல் மாவை சேனாதிராஜாவிடம் கட்சியின் தலைமைப் பதவியைக் கையளித்து இரா.சம்பந்தன் பதவி இறங்கிய போது, அவருக்குக் கட்சியின் பெருந்தலைவர் என்ற ஒரு கௌரவம் வழங்கப்பட்டது. இது, கட்சியின் யாப்பில் அமைந்த ஒரு பதவி அல்ல எனினும், யாப்பில் எழுதாத ஒரு கௌரவ பதவி. அவரே கட்சியின் அரசியல் குழுவுக்குத் தலைவராகவும் பேணப்படுகின்றார்.

எனினும், இப்போது வயது மூப்பினால் அவரால் அந்தப் பெருந்தலைவர் பதவியின் பொறுப்புகளையும் ஆற்ற முடியாதுள்ளது.

அந்தப் பதவி மாவை சேனாதிராஜாவுக்கு இப்போது வழங்கப்பட வேண்டும் என்று அத்தரப்புகள் வலியுறுத்துகின்றன. தலைமைப் பதவிக்குப் போட்டியிடும் வேட்பாளர்களில் குறைந்தது ஒருவராவது அதை விரும்புகின்றார் என்று தெரிகின்றது. மற்றவரின் கருத்துத் தெரிய வரவில்லை. அவரும் அதை வரவேற்கக் கூடும்.

இதுகுறித்து மாவை சேனாதிராஜாவுக்கு நெருக்கமான சில தரப்புகள் அவருடன் பேசியிருக்கின்றன. அவரும் அந்தத் திட்டத்தை வரவேற்கின்றார் என்ற சமிக்கைகள் கிடைத்தன.

எல்லாம் சமூகமாக நடந்தால் சரி.

\+ + +

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் அங்கத்துவக் கட்சியான ஜனநாயகப் போராளிகள் கட்சிக்கும் ஐ.தே.கட்சியின் அலுவலர் குழுவுக்கும் இடையே யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் ஆரவாரம் காட்டாமல் - சந்தம்சந்தடியின்றி - வெளியே வெளிப்படுத்தப்படாமல் - ஒரு சந்திப்பு இடம்பெற்றுள்ளதாகத் தெரிகின்றது.

ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தலைவர்,செயலாளர், பொருளாளர் உட்பட ஐவர் யாழ்ப்பாணத்தில் உள்ள ஒரு விடுதியில் ஐ.தே.கட்சியின் முக்கிய பிரமுகரும் முன்னாள் அமைச்சருமான ஒருவரின் செயலாளருடனும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அலுவலகத்தின் தனிப்பட்ட உத்தியோகத்தர் ஒருவருடனும் இச் சந்திப்பில் கலந்து கொண்டுள்ளனர்.

இச் சந்திப்பில் பல விடயங்கள் பேசப்பட்டுள்ளன எனத் தெரிகின்றது. ஜனாதிபதியை நேரில் சந்திப்பதற்கான ஏற்பாட்டை மேற்கொண்டு தருமாறு ஜனநாயகப் போராளிகள் கட்சி சார்பில் கோரப்பட்டதாகவும் அறிய வந்தது.

\+ + +

இந்தியாவில் மாநில சட்டசபைத் தேர்தலை சந்திப்பதற்கு எப்படி எல்லாம் திட்டம் போட வேண்டியிருக்கின்றது, தயாராக வேண்டி இருக்கின்றது என்பதை அறியும் போது மூக்கில் விரலை வைக்க வேண்டியுள்ளது.

இப்போது ஐந்து மாநிலங்களில் சட்டசபைத் தேர்தல் வாக்களிப்பு நடந்து முடிந்து விட்டது. நாளை ஞாயிற்றுக்கிழமை வாக்கு எண்ணிக்கை நடக்கப் போகின்றது. தேர்தல் நடந்த மாநிலங்களில் ஒன்று தெலுங்கானா.

அங்கு சட்டமன்றத் தேர்தல் நேற்று முன்தினம் விறுவிறுப்பாக நடந்தது. இதையடுத்து நாளை தேர்தல் முடிவுகள் வர உள்ளன.

நேற்று முன்தினம் மாலை தேர்தலுக்கு பிந்தைய கருத்து கணிப்புகள் வெளியாகின. இதில் தெலுங்கானாவில் காங்கிரஸ் ஆட்சியைப் பிடிக்கும் என்று கணிப்புகள் கூறியுள்ளன. காங்கிரஸ் கட்சி 60 முதல் 79 இடங்கள் வரை வெற்றி பெற வாய்ப்புள்ளது. தற்போது ஆட்சியில் இருக்கும் சந்திரசேகர ராவ் கட்சி 40 முதல் 56 இடங்களைப் பிடிக்கவும் வாய்ப்புள்ளது எனக் கருத்துக்கணிப்பில் கூறப்பட்டுள்ளது. அங்கே உள்ள 119 இடங்களில் 60 இடங்களிலாவது வென்றால்தான் பெரும்பான்மை கிட்டும்.

தெலுங்கானா தேர்தல் தங்களுக்கு சாதகமாகாமல் தொங்கு சட்டசபைக்கான வாய்ப்புகள் அமையும் பட்சத்தில் வெற்றி பெறும் எம்.எல்.ஏ.க்களை சொகுசு விடுதி ஒன்றில் வைத்துப் பாதுகாக்க காங்கிரஸ் முடிவு செய்துள்ளது.

பெங்களூருவில் நவீன வசதிகள் கொண்ட சொகுசு விடுதியை அக்கட்சி தயார் செய்து வைத்துள்ளதாம். தேர்தல் முடிவுகளில் இழுபறி ஏற்பட்டால், தெலுங்கானா பகுதியில் இருந்து வெற்றி பெறும் தமது கட்சி எம்.எல்.ஏ.க்கள் சந்திர சேகர ராவ் கட்சிக்குத் தாவுவதை தடுக்கவும், குதிரைப் பேரத்துக்கான முயற்சிகளையும் முறியடிக்கவும், காங்கிரஸ் இத்தகைய ஏற்பாடுகளை செய்துள்ளது.

நாளை ஞாயிற்றுக்கிழமை வாக்கு எண்ணிக்கைக்குப் பிறகு எம்.எல்.ஏ.க்களை இடமாற்றம் செய்வது குறித்து முடிவெடுக்கப்படும் என்று கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கையிலும் ஜனாதிபதி பதவிகளில் இருப்போர் தேர்தலின் பின்னர் தமக்கு வசதியான அரசை அமைப்பதற்காக அமைச்சர் பதவி, இராஜாங்க அமைச்சர் பதவிகளைப் பேரங்களாக முன்வைத்து எம்.பிக்களை வளைக்கும் சிறுமைத்தனம் தாராளமாகவே உண்டு.

ஏன், வழமைக்கு மாறாக கடந்த ஆண்டில் புதிய ஜனாதிபதியை நாடாளுமன்றமே தெரிவு செய்யும் நிலைமை ஏற்பட்டபோது இடம்பெற்ற குதிரை பேரங்கள் குறித்து நாம் அரசல் புரசலாக அறிந்திருந்தோம்தானே...?

நமது தமிழர் தரப்பிலும் சில எம்.பிகளுக்கு மத்திய கிழக்கு நாடுகளின் வங்கிக் கணக்குகள் மூலம் கைமாறிய தொகைகள் குறித்து மலைக்க வைக்கும் தகவல்கள் வந்தமையையும் மறக்க - மறுக்க - முடியாது.

எது எப்படி என்றாலும் இந்தியாவின் குதிரைப் பேரக் கட்டத்தை இலங்கை எட்டுவதற்கு இன்னும் சில படிகளாவது முன்னேற வேண்டியுள்ளது. நமது அரசியல்வாதிகளின் தார தம்மிய நிலைமைகளை நோக்கும் போது, அந்தக் கட்டத்தையும் நமது நாடு தவறாது விரைவில் எட்டிப் பிடித்துத் தாண்டும் என்று நம்பலாம்..!



நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# நீதித்துறையின் நடவடிக்கை என்ன?

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சி அதிகாரத்தின் கீழ் ஊடக அடக்குமுறை உச்சத்தைத் தொட்டிருப்பது கண்கூடு.

ஊடகத்துறை ஜனநாயகத்தின் நான்காவது தூணாக மதிக்கப்படுவது. நிறைவேற்றதிகாரம், சட்டங்களை யாக்கும் நாடாளுமன்றம், நீதித்துறை ஆகியவை ஜனநாயகத்தைத் தாங்கி நிற்கும் முக்கிய மூன்று தூண்கள் எனின், அந்த மூன்றின் செயற்பாடுகளின் - இயக்கத் தன்மைகளின் - ஒழுக்கத்தை கண்காணிக்கும் காவல் நாய் ஊடகத் துறையாகும்.

அதன் காவல் பொறுப்பைப் பங்கப்படுத்தி, மலினப்படுத்தி, அதை அடக்கி, ஒடுக்குவதன் மூலம் தான் கட்டற்று, எல்லை மீறி, செயற்படலாம் என்று கங்கணம் கட்டி காய் நகர்த்துகின்றது நாட்டின் நிறைவேற்றதிகாரம்.

ஊடகத்துறைக்கு எதிராக - குறிப்பாக தமிழர் தாயகப் பிரதேசத்தில் ஊடகவியலாளர்களுக்கு எதிராக - கட்டவிழும் பொலிஸாரின் மோசமான அணுகுமுறை இந்த உள்நோக்கத்தின் வெளிப்பாடுதான்.

சம்பவ இடங்களில் செய்தி சேகரிக்கும் ஊடகவியலாளர்களையே பொலிஸாரின் பணிக்கு இடைஞ்சலாக இருந்தார்கள் என வழக்குத் தொடுத்து மாட்ட வைக்க எண்ணும் பொலிஸாரின் அத்துமீறல், ஜனநாயக நாடு ஒன்றின் பொதுவான வரையறைகளைத் தாண்டிய கொடும் குற்றச் செயலாகும்.

இந்த நடவடிக்கை மூலம் பொலிஸாரும், ஆட்சித் துறையினரும் மூன்று தரப்புகளை ஏமாற்றி வழிநடத்த முயலுகின்றனர் என்பது வெளிப்படையானது.

முதலாவது - ஊடகத்துறை.

அடுத்தது - நீதித்துறை.

மூன்றாவது - பொதுமக்கள்.

அதில் முதல் துறையினரான ஊடகவியலாளர்கள் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தி, நிலைமையை மக்களுக்கும் சர்வதேசத்துக்கும் எடுத்துக்காட்டுவதற்காக இன்று வவுனியாவில் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபடப் போகின்றார்கள்.

மூன்றாவது துறையினரான பொதுமக்கள் இந்த எதிர்ப்பு நடவடிக்கைகளில் பங்களித்தாலும், அதற்கு மேலதிகமாகத் தங்கள் கருத்துக்களை தங்கள் வாக்குகளினால் இந்த ஆட்சி பீடத்திற்கு காலம் கிட்டும் போது செம அடியாகக் கொடுப்பதன் மூலம் தமது ஏவல் படைகள் வாயிலாக ஊடகங்களையும் ஊடகவியலாளர்களையும் பந்தாடும் ஆட்சி பீடத்திற்கு சரியான பாடம் கற்பிப்பர் என்பது நிச்சயம்.

இரண்டாவது துறையினரான நீதித்துறை மேற்படி ஊடகவியலாளர்களை வேண்டுமென்றே தீய நோக்கோடு தடுத்து வைத்துத் தண்டிப்பதற்கு எடுக்கப்படும் பொலிஸாரின் கொடுஞ்செயலை எப்படிக் கையாளப் போகின்றது என்பது அவதானிக்கப்படும் விடயமாக உள்ளது.

வழக்குப் போட்டார்கள், வழக்கைத் தள்ளுபடி செய்தோம் அல்லது தண்டித்தோம் என்று நீதித்துறை அமைந்து விட முடியாது,

மாவீரர் நாளில் அமைதியான முறையில் நினைவேந்துவதை வேண்டுமென்றே குற்றமாக்க பயங்கரவாத தடைச்சட்டத்தை இலங்கை அரசு பயன்படுத்துகின்றது என்று 'பேர்ள்' அமைப்பு நேரடியாகக் குற்றம் சுமத்தியுள்ளது.

இப்போது அதை ஒட்டிய விடயங்களில் செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகத்துறையை அடக்குவதற்கும் தவறான வழிமுறைகளைப் பயன்படுத்துகிறது இலங்கை ஆட்சிப்பீடத்தின் ஏவல் படையான பொலிஸ். அதற்கு நீதித்துறை தரப் போகின்ற பதில் - உரிய நடவடிக்கை - என்ன? ஜனநாயகத்தின் காவல் நாய்களான ஊடகத்துறை அதை எதிர்பார்த்து காத்திருக்கின்றது.

# ஊடக அடக்கு முறைக்கு எதிராக அணி திரள வவுனியா மாவட்ட விவசாயிகளுக்கு அழைப்பு

ஊடக அடக்கு முறைக்கு எதிராக குரல் கொடுக்க அனைத்து விவசாயிகளும் அணி திரள வேண்டும் என வவுனியா மாவட்ட விவசாய சம்மேளனத் தலைவர் செல்லத்தம்பி சிறிதரன் தெரிவித்துள்ளார்.

வவுனியா, பழைய பஸ் நிலையம் முன்பாக இன்று காலை 10 மணிக்கு நடைபெறவுள்ள ஊடக அடக்கு முறைக்கு எதிரான ஆர்ப்பாட்டம் தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

வவுனியா மாவட்டம் விவசாயத்தை அடிப்படையாக கொண்ட ஒரு மாவட்டம். யுத்தத்தால் பாதிப்படைந்த விவசாயிகள் தமது வாழ்வாதாரத்தை மெல்ல மெல்ல கட்டியெழுப்பி வருகின்றனர். இந்த நேரத்தில் விவசாயிகளின் துன்பங்களையும், அவர்களது பிரச்சினைகளையும் இந்த மண்ணில் இருந்து ஊடகவியலாளர்கள் அர்ப்பணிப்புடனும், துணிவுடனும் வெளிக்கொண்டு வந்துள்ளார்கள்.

அவ்வாறு மக்களின் பிரச்சினைகளை வெளிக் கொண்டு வந்து அதற்குத் தீர்வு காண வேண்டும் என்ற நோக்கோடு செயற்படும் ஊடகங்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் மீதான அரச அடக்கு முறைகளை நாம் ஏற்க முடியாது. இது ஜனநாயகத்திற்கு முரணான செயற்பாடு ஆகும். ஊடகவியலாளர்களுக்கே இந்த நிலை எனில், சாதாரண விவசாயிகளின் நிலையை நாம் எவ்வாறு நோக்கமுடியும்?

எனவே, அரச பாதுகாப்பு தரப்புக்களும், பொலிஸாரும் ஊடகங்கள் மீது மேற்கொள்ளும் அடக்குமுறைகள், மற்றும் மிரட்டல்களுக்கு எதிராக சனிக்கிழமை காலை 10 மணிக்கு வவுனியா பழைய பஸ் நிலையத்தில் இடம்பெறவுள்ள கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு விவசாய சம்மேளனமும் தனது ஆதரவைத் தெரிவித்துக் கொள்கின்றது. அத்துடன் இந்த ஆர்ப்பாட்டத்தில் விவசாயிகளையும் கலந்து கொண்டு போராட்டத்தை வலுப்படுத்துமாறு மாவட்ட சம்மேளனம் சார்பாக கேட்டுக் கொள்கின்றேன். – என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




## அணை திறப்பில் ஆந்திரா - தெலுங்கானா இடையே

# முறுகல்!

நாகார்ஜுன சாகர் அணையை திறப்பதில் ஆந்திரா மற்றும் தெலுங்கானா மாநிலங்களுக்கு இடையே முறுகல் நிலை ஏற்பட்டது.

நாகார்ஜுனா சாகர் அணையில் மொத்தம் 29 மதகுகள் உள்ளன. இதில் ஒன்று முதல் 13 மதகுகள் வரை தெலுங்கானா மாநிலத்துக்கும், மீதமுள்ளவை ஆந்திர மாநிலத்துக்கும் சொந்தமானவை.

இந்த அணையின் பராமரிப்பு மற்றும் நிர்வாகம் ஆகியவை தெலுங்கானா மாநில அரசின் கட்டுப்பாட்டில் உள்ளது.

இந்நிலையில், நாகார்ஜுனா சாகர் அணையைத் திறப்பதில் தெலுங்கானா மற்றும் ஆந்திர அரசுகளிடையே திடீரென நேற்றுமுன்தினம் மோதல் ஏற்பட்டது.

தெலுங்கானா அரசால் பூட்டப்பட்ட அணைக் கதவின் பூட்டுகள் மற்றும் சி.சி.டி.வி. கமராக்களை ஆந்திர அரச அதிகாரிகளால் உடைக்கப்பட்டது.

அணையை திறப்பதில் ஏற்பட்ட மோதலால் அப்பகுதியில் பொலிஸார் குவிக்கப்பட்டனர். இதனால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

# ‘ஜெய் ஸ்ரீராம்’ சொல்ல மறுத்த இஸ்லாமியர் மீது தாக்குதல்

”ஜெய் ஸ்ரீராம்” என சொல்ல மறுத்த இஸ்லாமியரைத் தாக்கி, தாடியில் தீ வைத்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கர்நாடகா, கொப்பல் மாவட்டத்தில் நடந்த இச்சம்பவம் குறித்து பாதிக்கப்பட்ட நபர் ஹுசென்சாப் என்பவர், பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றை அளித்துள்ளார்.



அதில் அவர், கடந்த 25ஆம் திகதி ஹொசப்பேட்டை நகரிலிருந்து கங்காவதி நகருக்குத் திரும்பிக் கொண்டிருந்த போது, ஆள் நடமாட்டம் இல்லாத இடத்தில் மர்ம நபர்கள் இருவர் தன்னைத் தாக்கினர் எனவும், பின்னர் அந்த நபர்கள் தன்னிடம் இருந்து பணத்தைப் பறித்துக் கொண்டு, உடைந்த பீர் பாட்டிலின் துண்டுகளால் தனது தாடியை வெட்ட முயன்றனர் எனவும், பின்னர் தனது தாடியை தீ வைத்து எரித்தனர் எனவும் அவர் குற்றஞ்சாட்டினார்.

மேலும், தன்னை விட்டுவிடும்படி கெஞ்சினார் எனவும் ஆனால், அவர்கள் தன்னை ஜெய் ஸ்ரீராம் என்று சொல்லும்படி வற்புறுத்தினர் எனவும் குறிப்பிட்டுள்ளார். அத்துடன், தனக்கு பார்வையில் பிரச்சினை இருப்பதால், தன்னால் அவர்களை அடையாளங் காண முடியவில்லை என்றும் அவர் கூறினார்.

பின்னர் அங்கிருந்த ஆடு மேய்ப்பவர்கள் தன்னைக் காப்பாற்ற வந்த போது, மர்ம நபர்கள் தன்னை கல்லால் தலையில் அடிக்க முயன்றனர் எனவும் அவர் தனது முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து வழக்குப் பதிவு செய்த பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். அதில், இந்தத் தாக்குதல் வகுப்புவாத தாக்குதலாக இல்லாமல் கொள்ளையடிக்கும் விதமாக நடந்துள்ளமை தெரிகிறது என்றும் அவர்கள் தெரிவித்தனர்.



# “எதிரிக்கு பதிலடி கொடுக்க தயாராக இருக்க வேண்டும்”

## தம் நாட்டுப் படைகள் மத்தியில் வட கொரிய அதிபர் பேச்சு

“எதிரிகளுக்குப் பதிலடி கொடுக்கத் தயார் நிலையில் இருக்க வேண்டும்” என தமது நாட்டு இராணுவத்திற்கு வடகொரிய அதிபர் அறிவுறுத்தியுள்ளார்.

வடகொரியாவில் விமானப்படையினர் தினத்தையொட்டி, அந்நாட்டின் அதிபர் கிம் ஜாங் உன் தனது மகளுடன் விமானப்படை தலைமையகத்திற்கு நேரில் சென்றார். இதைத் தொடர்ந்து விமானப்படை வீரர்கள் வான் சாகசங்களை நிகழ்த்தினர்.

இந்த நிகழ்ச்சியின்போது, போர் திறன்களை மேம்படுத்துவதற்கான வழிகாட்டுதல்களை கிம் ஜாங் உன் வெளியிட்டார்.

எதிரிகளின் அனைத்து வகையான தாக்குதல்களுக்கும் பதிலடி கொடுக்கும் வகையில் தயார் நிலையில் இருக்குமாறும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

# உலகின் மிக வயதான ஆமை

அட்லாண்டிக் பெருங்கடலின் தொலைதூர தீவான செயின்ட் ஹெலனா தீவில் பராமரிக்கப்பட்டு வரும் ஆமை ஒன்று, உலகின் மிக வயதான ஆமை என்ற சிறப்பைப் பெற்றுள்ளது. அந்த ஆமையின் பெயர் ஜோனாதன்.

கி.பி. 1832ஆம் ஆண்டு பிறந்ததாகக் கணிக்கப்பட்டுள்ள இந்த ஆமையானது, 1882இல் செசல்லில் இருந்து செயின்ட் ஹெலனா தீவுக்குக் கொண்டு வரப்பட்டது.

வயதானாலும் சுறுசுறுப்புடன் வலம் வரும் ஜோனாதன், இந்த ஆண்டு 191ஆவது பிறந்தநாளைக் கொண்டாடிக்கொண்டிருக்கிறது. இதுதொடர்பான வீடியோவை கின்னஸ் அமைப்பு வெளியிட்டுள்ளது.

ஆமையின் வேகமும் சுறுசுறுப்பும் குறைவதற்கான அறிகுறி இல்லை என்று, அதற்கு சிகிச்சை அளித்து வருபவரான கால்நடை மருத்துவர் ஜோ ஹோலின்ஸ் தெரிவித்துள்ளார்.

“ஜோனாதன் ஆமை வாசனை உணர்வை இழந்துவிட்டது. கண்புரை நோயால் பாதிக்கப்பட்டு கிட்டத்தட்ட பார்வை மங்கிவிட்டது. எனினும், சாப்பிடுவதில் எந்தப் பிரச்சனையும் இல்லை. வாரத்திற்கு ஒருமுறை பழங்கள் மற்றும் காய்கறிகளை பராமரிப்புக் குழுவினர் ஊட்டுகின்றனர” என்றும் மருத்துவர் குறிப்பிட்டார்.





# துவாரகா பெயரில் வெளிவந்த காணொலியை நிராகரித்தது நாடுகடந்த தமிழீழ அரசாங்கம்!

தமிழீழத் தேசிய மாவீரர் நாளில், தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு. வே.பிரபாகரன் அவர்களது புதல்வி துவாரகாவின் பெயரில் வெளிவந்த காணொலியை நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் முற்றாக நிராகரிக்கின்றது என்று அதன் சார்பில் நேற்று வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:–

கிடைக்கப்பெற்ற உறுதியான தகவல்கள், தரவுகளின் அடிப்படையிலும், எமது அவதானங்களின் வழி நின்றும் இம் முடிவினை நாம் எடுத்துள்ளோம்.



தமிழீழத் தேசியத் தலைவரையும், அவரது குடும்பத்தினரையும் உலகத் தமிழ் மக்கள் தங்கள் இதயங்களில் அன்போடும், மதிப்போடும் வைத்திருக்கின்றார்கள். எனவேதான் அவரது மகளாக வேறு ஒருவரை முன்வைப்பது எங்கள் உள்ளங்களில் பெரும் வேதனையை ஏற்படுத்துகின்றது.

பொதுவெளியிலும், பொதுத்தளத்திலும் தமிழ்மக்கள் இவ்விடயத்தை நிராகரித்திருந்தமை நம்பிக்கையைத் தந்துள்ளதோடு, தகுந்த பதிலடியாகவும் அமைந்துள்ளது.

இதேவேளை இவ்விவகாரத்தைப் பேசுபொருளாகக் கொண்டு கையாளுகின்ற சமூக ஊடகங்களை பொறுப்புணர்வுடன்நடந்துகொள்ளுமாறும்வேண்டுகின்றோம்.

“விழிப்பே அரசியலின் முதற்படி“ என்ற தமிழீழத் தேசியத் தலைவரது வாக்கை நாம் அனைவரும் நினைவிருத்தி, தொடர்ந்தும் விழிப்புடன் செயற்படுவோம்.

நன்றி

தமிழர் தலைவிதி தமிழர் கையில்

தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்

– என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# அதிகரித்த போதைவஸ்துப் பாவனையால் யாழில் எய்ட்ஸ் பரவலும் கூடி இருக்கலாம்

## வடபிராந்திய பாலியல் நோய்த் தடுப்பு சிகிச்சை நிபுணர் கருத்து




யாழ்ப்பாணத்தில் அதிகரித்துள்ள போதைவஸ்து பாவனையால் , எயிட்ஸ் நோயாளர்களின் எண்ணிக்கையும் அதிகரித்து இருக்கலாம் என வடபிராந்திய பாலியல் நோய்த் தடுப்பு சிகிச்சை நிலைய வைத்திய நிபுணர் வைத்தியர் ஏ. றொகான் தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில் –

யாழ்ப்பாணத்தில் தற்போது பெருமளவான போதைப்பொருள் பாவனையாளர்கள் இரத்த நாளங்களின் ஊடாக உடலில் போதைப்பொருளை ஏற்றிக் கொள்கின்றார்கள். அதனால் எயிட்ஸ் போன்ற தொற்று நோய் பரவும் அபாயம் காணப்படுகிறது.

சாதாரண ஒரு ஸ்ரிஞ்ச் மூலம் ஒரே ஊசியைப் பலர் பாவிப்பதனால் ஒருவருக்கு எயிட்ஸ் தொற்று இருந்தால், அதனைப் பாவிக்கும் மற்றவருக்கும் தொற்றக்கூடிய சாத்திய கூறுகள் அதிகமாகக் காணப்படுகின்றன.

இலங்கையில் தற்போது 5,500 பேர் எச்.ஐ.வி. வைரஸினால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அதிலே வடக்கு மாகாணத்தை எடுத்துக் கொண்டால் 90 பேர் இன்று வரைக்கும் எச்.ஐ.வி. தொற்று உள்ளவர்கள் என இனங்காணப்பட்டுள்ளார்கள்

அதில் யாழ்ப்பாணத்தை பொறுத்த வரை சுமார் 65 பேர் எயிட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டு அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர்.

ஒவ்வொரு ஆண்டும் எயிட்ஸ் தொற்றால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை சராசரியாகக் கூடிக் கொண்டு போகின்றது.

யாழ்ப்பாணத்தில் கடந்த வருடம் 3 பேர் புதிதாக இனம் காணப்பட்டார்கள். இந்த ஆண்டு நான்கு பேர் அடையாளம் காணப்பட்டு இருக்கிறார்கள். அவர்களுக்குரிய சிகிச்சைகள் யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் வழங்கப்படுகிறது. – என மேலும் தெரிவித்தார்.

# யாழ். மத்திய பஸ் நிலையத்தில் கஞ்சாவுடன் இளைஞர் கைது!



யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்தில் கேரளக்க ஞ்சாவுடன் இளைஞரொருவர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டார்.

கிளிநொச்சி கோணாவில் பகுதியைச் சேர்ந்த 23 வயதான இளைஞரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபரும் மீட்கப்பட்ட ஒரு கிலோ 480 கிராம் கேரள கஞ்சாவும் யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் விசேட அதிரடிப் படையினரால் கையளிக்கப்பட்டது.

சந்தேக நபரை யாழ்ப்பாணம் நீதவின் நீதிமன்றத்தில் முற்படுத்த யாழ்ப்பாணம் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.



### பாவற்குளத்தின் வான் கதவுகள் திறந்து நீர் பாய்வதால்

# நெளுக்குளம் - செட்டிகுளம் வீதியை இரவில் பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டுகோள்!

**பயன்பாடுத்துவோருக்கு அனர்த்த முகாமைத்துவ நிலையம் விடுத்துள்ள அறிவிப்பு**

வவுனியா, பாவற்குளத்தின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளமையால், நெளுக்குளம் – செட்டிகுளம் வீதியை இரவு பயன்படுத்துவதை தவிர்க்குமாறு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

வவுனியாவில் பெய்து வரும் தொடர் மழை காரணமாக பாவற்குளத்தின் நீர்வரத்து அதிகரித்து 19.4 அடிக்கு நீர்மட்டம் உயர்வடைந்துள்ளது. தொடர்ந்தும் மழை பெய்து வருவதனால் மேலும் நீர்மட்டம் சடுதியாக உயர்வடைய வாய்ப்புள்ளது.

இதன் காரணமாக, பாவற்குளத்தின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. இதனால் நேரியகுளம் ஊடான நெக்குளம் – செட்டிகுளம் வீதியில் நீர் பாய்ந்து செல்வதால் பொதுமக்கள் அந்த வீதியை பயன்படுத்துவதை நிறுத்தி, மாற்று வீதிகளைப் பயன்படுத்துமாறு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.



# வன்னாத்தவில்லில் வயோதிபரின் சடலம் அழுகிய நிலையில் நேற்றுக் கண்டுபிடிப்பு

(ரஸீன் ரஸ்மின்)

புத்தளம் - வன்னாத்தவில்லு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட எட்டாம் கட்டை கரடிபூவல் பகுதியில் உருக்குலைந்த நிலையில் சடலமொன்று நேற்று மீட்கப்பட்டுள்ளது.

கரடிப்பூவல் பகுதியைச் சேர்ந்த ரணசிங்க ஆராச்சிலாகே சுனில் பிரேம (வயது 57) எனும் நபரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நபர், திருமணம் முடிக்காமல் வயோதிப பெண் ஒருவருடன் குடிசை வீட்டில் வாழ்ந்து வந்ததார் எனக் கூறப்பட்டது. சில நாள்களுக்கு முன்னர் இந்தப் பெண் தனது சொந்த ஊருக்குச்சென்ற நிலையிலேயே இவர் இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அந்தப் பகுதியில் உருக்குலைந்து, அழுகிய நிலையில் சடலமொன்று கிடப்பதாகவும், துர்நாற்றம் வீசுவதாகவும் அந்தப் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் வன்னாத்தவில்லு பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அந்தத் தகவலின் அடிப்படையில், சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸாரும்,



பொலிஸ் தடயவியல் பிரிவினரும் சம்பவ இடத்தில் முதற்கட்ட விசாரணையை மேற்கொண்டனர்.

இந்நபர் கடந்த 10 நாள்களுக்கு முன்பே உயிரிழந்திருக்கலாம் எனவும், சடலம் அடையாளம் காண முடியாத வகையில் அழுகிய நிலையில் உருக்குலைந்து காணப்படுவதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

மேலும், சடலத்தின் கை மற்றும் கால் பகுதிகள் உட்பட சில உடல் அவயங்களை மிருகங்கள் சாப்பிட்டிருக்கலாம் எனத் தாம் சந்தேகிக்கின்றனர் எனவும் பொலிஸார் கூறினர்.

சம்பவ இடத்திற்கு வருகை தந்த புத்தளம் மாவட்ட பதில் நீதிவான் எம்.எம்.இக்பால், சம்பவ இடத்தில் நீதிவான் விசாரணையை முன்னெடுத்தார்.

சடலத்தை, திருமணம் முடிக்காமல் அவரோடு வாழ்ந்துவந்த வயோதிப பெண் அடையாளம் காட்டினார்.

அதனையடுத்து, சடலத்தை பிரேத பரிசோதனைக்காக புத்தளம் தள வைத்தியசாலைக்கு கொண்டு செல்லுமாறும், பிரேத பரிசோதனையின் பின்னர் சடலத்தை மகனிடம் ஒப்படைக்குமாறும் புத்தளம் மாவட்ட பதில் நீதிவான் எம்.எம்.இக்பால், பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் வன்னாத்தவில்லு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# சக கைதிகளின் தாக்குதலிலேயே மட்டு.சிறைக் கைதி உயிரிழப்பாம்

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு சிறைச்சாலையில் இருந்து சுகயீனம் காரணமாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு உயிரிழந்த கைதி, தாக்கப்பட்டு உயிரிழந்துள்ளார் எனப் பிரேத பரிசோதனையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கண்டறியப்பட்டுள்ளதாக மட்டு. தலைமையக பொலிசார் தெரிவித்தனர்.

இக்கைதி சக கைதிகளால் தாக்கப்பட்டு உயிரிழந்திருக்கலாம் எனக் கூறப்படுகின்றது.

இச் சம்பவத்தில் உயிரிழந்த கொக்கட்டிச்சோலை முனைக்காடு பிரதேசத்தைச் சோந்த 47 வயதுடைய சோமசுந்தரம் துரைராஜா கடந்த 27 ஆம் திகதி கசிப்பு வழக்கில் பிடியாணை பிறப்பிக்கப்பட்டு கொக்கட்டிச்சோலை பொலிஸாரால் கைது செய்யப்பட்ட சந்தேகநபராவார். அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டு சிறைச்சாலையில் அடைக்கப்பட்டார்.

இந்த நிலையில் அவர் கடந்த செவ்வாய்க்கிழமை (28 ஆம் திகதி) சிறைச்சாலையில் சுகயீனமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

இதனையடுத்து சடலத்தைப் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்துமாறு மட்டக்களப்பு நீதிவான் பீற்றர் போல் உத்தரவிட்ட நிலையில் சடலம் நேற்று முன்தினம் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது. மொட்டையான ஆயுதங்களால் தாக்கப்பட்டதாலேயே மரணம் ஏற்பட்டுள்ளதாக அதன் மூலம் தெரியவந்துள்ளது

இந்தக் கைதி, சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த போது, அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்த மற்ற கைதிகளுடன் முரண்பட்டு அந்தக் குழுவினர் அவரைத் தாக்கியுள்ளனர் எனப் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாணையில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாணைகளை மட்டு தலைமையக பொலிசார் மேற்கொண்டுவருகின்றனர்.

# பொலிஸ் பயங்கரவாதிகளுக்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கை எடுப்போம்!

## மட்டு. சிறையில் கைதிகளைச் சந்தித்த பின் கஜேந்திரன் கூளுரை




(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பில் மாவீரர் நினைவேந்தலில் ஒழுங்கு செய்தவர்களைக் குறிவைத்தே இந்தப் பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் பத்துப் பேரினதும் கைது. இந்தக் கைதுகள் அனைத்துமே மோசமான இனவழிப்பு விளைவுகளுக்கு தடை எதுவும் இல்லாமல் தமிழ் மக்களை ஒட்டு மொத்தமாக அரசியல் பாதையில் இருந்து விலகிச் செல்ல செய்து முடிப்பதற்கான ஒரு முயற்சியாக இடம்பெறுகிறது. இதை முன்னெடுக்கும் பொலிஸ் பயங்கரவாதிகளுக்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கையை மேற் கொள்ளவுள்ளோம் என நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் கடந்த சில தினங்களாக மாவீரர் நினைவேந்தலில் ஈடுபட்ட தமிழ் தேசிய மக்கள் முன்னணி அமைப்பாளர், அவரது மகன் உட்பட 10 பேரை பயங்கரவாத தடைச்சட்டத்தில் கைது செய்து சிறையில் அடைத்துள்ளனர். அவர்களை நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், எஸ்.கஜேந்திரன், தேசிய அமைப்பாளர் த.சுரேஸ் ஆகியோர் நேற்று சனிக்கிழமை மட்டு. சிறைச்சாலைக்குச் சென்று சந்தித்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் இவ்வாறு கூறினார்.

பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் கடந்த 25 , 27 ஆம் திகதி தமிழ் தேசிய மக்கள் முன்னணி கட்சியைச் சேர்ந்த இருவர் உட்பட 10 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அரசாங்கமே நினைவு கூரலாம் என தெரிவித்துவிட்டு, வடக்கு, கிழக்கிலே மூதூர் சம்பூரை தவிர அனைத்து நீதிமன்றங்களிலும் தடை உத்தரவு பெறுவதற்கு பொலிஸார் முயற்சி எடுத்த போது, அனைத்து நீதிமன்றங்களிலும் நினைவு கூர்வதற்கு உரிமை உண்டு எனத் தீர்ப்பு வழங்கப்பட்டு, அதே வேளை விடுதலைப் புலிகள் இயக்கம் தடைசெய்யப்பட்ட அமைப்பு என்ற வகையில் அந்த அமைப்பின் சின்னங்கள் இல்லாமல் அந்த நினைவேந்தல் நடைபெறமுடியம் எனக் கட்டளை வழங்கப்பட்டது.

இந்த நிலையில் அந்த நினைவேந்தலில் கலந்துகொண்டு, அதனை ஒழுங்கு செய்த ஒரே ஒரு காரணத்திற்காக இந்த நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இது அப்பட்டமாக சிறிலங்காவினுடைய மோசமான சட்டங்களுக்கு ஊடான ஒரு செயற்பாடு. இந்த கைதுகள் அரசியல் காரணங்களுக்காகச் செய்யப்பட்டுள்ளனவாக இருக்கின்றனவே தவிர, சட்டக் காரணங்களுக்காக அல்ல என்பது மிக அப்பட்டமாக தெரிகின்றது.

நாங்கள் கைது செய்யப்பட்ட அத்தனை பேரையும் சந்தித்து பேசிய போது அவர்கள் தங்களுக்கு ஏற்பட்டுள்ள இந்த அநீதிக்கு முற்றுப் புள்ளிவைக்கின்ற ரீதியில் மேலதிகமான சட்ட நடவடிக்கை வேண்டும் என்றனர். எனவே சட்ட முரணாக நடந்து கொள்ளுகின்ற பொலிஸ் பயங்கரவாதிகளுக்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கையை நாங்கள் மேற் கொள்ளவுள்ளோம்.

தமிழ் மக்கள், நியாயமில்லாத சிறிலங்கா பயங்கரவாத தடைச் சட்டத்தை தெரிந்து அதனுள் போகாது நடந்து கொண்ட போதும், அவர்கள் குறிவைக்கப் படுகின்றமையை தமிழ் தேசிய மக்கள் முன்னணியினரான நாம் கடுமையாக எதிர்க்கின்றோம். அதேவேளை நாங்கள் இவ்விடயங்களை விளங்கிக் கொண்டு இந்தப் பயங்கரவாதத்தை மக்கள் மீது திணிக்கின்ற செயற்பாடுகளுக்கு அடிபணியாது, நாங்கள் இதை எதிர் நோக்க வேண்டும் என்பதுதான் எங்கள் விருப்பம். நாங்கள் இதனை எதிர்கொள்வோம். – என்றார்.




**உரலார் கேள்வி:- புதிய தலைவி வந்துவிட்டார் போல் தெரிகிறதே!. துவாரகாவின் மாவீரர் தின உரையினைக் கேட்டீர்களா?**

**உலக்கையார் பதில் :-** ஈழத்தில் வாழும் தமிழர்களை விட, புலம் பெயர் தமிழர்களும், தமிழகத் தலைவர்களும்தான் இந்த விடயத்தில் அதிகம் அக்கறை காட்டுகிறார்கள். அதுதான் ஏன் என்று தெரியவில்லை. துவாரகாவின் வெளிப்பாடு உண்மையென்றால் பின்வரும் கேள்விகளைக் கேட்கத் தோன்றுகிறது.

- அவர் இங்கிருந்து எப்படித் தப்பித்துப் போனார்?



- அவரை இங்கிருந்து தப்பிச் செல்ல வைத்தவர் யார்?
- பிரபாகரனின் இளைய மகன் பாலச்சந்திரனின் மரணம் உறுதியாக்கப்பட்டுள்ளது. துவாரகாவைத் தப்ப வைத்த அந்த நபர் ஏன் பிரபாகரனின் புதல்வர்களைத் தப்ப வைக்கவில்லை?
- இதுவரை துவாரகா யாருடைய பாதுகாப்பில், எங்கு, என்ன செய்து கொண்டிருந்தார்?
- பாதுகாப்புக் கருதி மறைந்திருந்தார் என்றால், அவர் இப்போது வெளிப்பட, பாதுகாப்பை வழங்கியிருப்பவர்கள் யார்?
- தற்போது திடீரென அவர் வெளிப்பட்டிருப்பதன் நோக்கம் என்ன?
- தான் பிரபாகரனின் மகள் என்பதற்கான நிரூபணம் எதனையும் அவர் ஏன் வெளியிடவில்லை?
- தமிழ்நாட்டுத் தலைவர்கள் சிலரும், புலம் பெயர் தமிழர்கள் சிலரும் வெளிப்பட்ட துவாரகாவை அங்கீகரிக்க, 'முண்டியடிப்பதன்' நோக்கம் என்ன?
- காலம் செல்லச் செல்ல புலிகளின் பெயரின் வலிமை குன்றினால் தமக்கான வருமானப் பாதை தடைப்படும் என சிலர் நினைக்கிறார்களா?

இந்தக் கேள்விகளுக்கான விடைகள் கிடைத்தால் தான், உங்கள் கேள்விகளுக்கான பதிலை என்னால் உறுதியாகச் சொல்ல முடியும். அது–வரை நடப்பவற்றிற்கு 'யாவும் கற்பனை' என்று தான் முடிவு எழுத வேண்டியிருக்கிறது.

**சல்லடையாரின் சலிப்பு :- ஈழத்தமிழர்களுக்குக் குடுமி முடியப் பார்க்கிறார்கள். பொய்யைச் சொன்னாலும் பொருந்தச் சொல்ல வேணும் பாருங்கோ....!**

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

**உரலார் கேள்வி:- அடுத்தடுத்து அடைந்து வரும் சினிமா வெற்றிகளை வைத்து 'விஜய்யும்' 'எம்.ஜி.ஆரைப்' போல அரசியலுக்கு வந்து வெற்றி காண்பார் என்று நினைக்கிறீர்களா?**

**உலக்கையார் பதில் :-** தீர்மானிக்கப்பட்ட வயதை அடைந்து விட்டால், யாருமே அரசியலுக்கு வந்து விடலாம். அது ஒரு ஜனநாயக நாட்டில் அனைவருக்கும் வழங்கப்பட்டிருக்கும் உரிமை. அந்த உரிமையை 'விஜய்' பயன்படுத்தினால் அதை யாரும் தடுக்க முடியாது.

ஆனால் ஒன்று, சினிமா வெற்றி மட்டுமே அரசியல் வெற்றியைத் தந்து விடும் என்று நினைப்பது தவறு. எம்.ஜி.ஆர். அரசியலுக்குள் வந்து வெற்றி பெற, சினிமாவைத் தவிர வேறு பல காரணங்களும் இருந்தன. அரசியலுக்குள் நுழைவதுக்கு முன்பே எம்.ஜி.ஆர். 'கொடைவள்ளல்' என்ற புகழைப்



பெற்றிருந்தார். 'விஜய்' அரசியலுக்குள் வருவதாய் முடிவு செய்த பின்பே கொடை வள்ளலாக மாற முயற்சிக்கிறார்.

**(15ஆம் பக்கம் பார்க்க)**

(14ஆம் பக்கத் தொடர்ச்சி)

எம்.ஜி.ஆர் தனது தாயான 'சத்யாவை' கடவுளாக நினைத்துக் கடைசிவரை போற்றினார். தனது தாயைப் போலவே ஏழை எளிய முதிய அன்னையர்கள் அனைவரையும் அவர் நேசித்தமையால், பெண்களின் ஒட்டு மொத்த ஆதரவும் அவருக்கு இருந்தது. இந்த இயல்புகளால் அவர் மக்கள் மனதில் ஆழப் பதிந்தபின்பே அரசியலுக்குள் நுழைந்தார். அதனால்தான் அரசியலில் அவரால் சுலபமாக வெற்றி பெற முடிந்தது.

விஜய்க்கு நடிகர் என்ற மதிப்பைத் தவிர வேறு மதிப்பேதும் இன்றுவரை மக்கள் மன்றில் உருவாக வில்லை. உறவுகளைக் கையாளுவதிலும் அவர் தோல்வியடைந்தவராகவே தெரிகிறது. படிப்படியாகத் தன்னை வளர்த்தெடுத்த தந்தையை அவர் மதிக்காமல் நடப்பது உலகறிந்த விடயம். தனது சினிமா வெற்றிக்குக் காரணமான நடிகர் விஜயகாந்தையும் அவர் சரியாகப் பேணவில்லை என்ற குறை விஜயகாந்தின் ரசிகர்கள் மத்தியில் இருப்பதாகப் பேசப்படுகிறது. உறவுகளை மதிக்காத இவரா நம்மை மதித்து, நமக்காகப் பாடுபடப் போகிறார் என மக்கள் நினைக்க வாய்ப்பிருக்கிறது.

எம்.ஜி.ஆர் நெடுங்காலமாக அரசியலில் இணைந்து இயங்கி வந்தவர். பெரிய தலைவர்கள் பலரது அன்பைப் பெற்றவர். விஜய் இதுநாள் வரை அரசியலில் தன் பெயர் பதிக்கவில்லை. அரசியல் நோக்கிய அழைப்புகள் வந்த போதும் கூட அதை அவர் தவிர்த்தே வந்தார். தற்போது கிடைக்கும் சினிமா வெற்றிகளை அரசியல் வெற்றியாக்கலாம் என அவர் நினைப்பதாய்த்தான் தெரிகிறது.

எனக்கென்னவோ நடிப்பின் வெற்றி மட்டுமே அரசியலின் வெற்றியாகிவிடாது என்று தோன்றுகிறது.இன்னும் சொல்லப் போனால், நிஜக் கதாநாயகன் ஆகும் ஆசையால், விஜய் சினிமாக் கதாநாயகத் தகுதியையும் இழந்து விடுவாரோ என்று யோசிக்க வேண்டி இருக்கிறது.

முன்பு அஜித்தின் ரசிகர்கள் மட்டும் தான் விஜய்யின் எதிரிகளாக இருந்தார்கள். இப்போது அஜித், ரஜினி, உதயநிதி என பலபேரது ஆதரவாளர்களும் இவரது எதிரிகளாய் மாறியுள்ளனர். இவையெல்லாம் விஜய்யின் அரசியல் வாழ்விற்கு இடையூறு செய்யும் என்றே நினைக்கிறேன்.

**சல்லடையாரின் சலிப்பு :- ஆசை இருக்கு... அரசாள அம்சம் ????ஹீ...ஹீ.....ஹீ!**

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

**உரலார் கேள்வி:- zee டீவியில் அசானியினதும் கில்மிசாவினதும் பாடல்களைக் பார்த்தீர்களா?**

**உலக்கையார் பதில் :-** பார்த்தேன்!, ரசித்தேன்!, மகிழ்ந்தேன்!

நமது பிள்ளைகள் வெளிநாடுகளிற்குச் சென்று பெயர் பெறுகிற பொழுது மகிழாமல் எப்படி இருக்க முடியும்? இரண்டு பிள்ளைகளும் நன்றாகவே பாடினார்கள். பாரபட்சமின்றிச் சொல்ல வேண்டுமானால் கில்மிசாவின் பாடலின் தரம் மிக உயர்ந்ததாய் இருந்தது. மிகப் பின்தங்கிய சூழலில் இருந்து வெளிவந்தவர் என்ற வகையில், அசானியின் திறமையையும் பாராட்டாமல் இருக்க முடியாது.

மனதைச் சங்கடப்படுத்திய சில விடயங்களையும் இங்கு சொல்ல வேண்டி இருக்கிறது.

தமிழ்நாட்டு 'டீவி சனல்கள்' ஈழத்தமிழினத்தின் வீழ்ச்சியை விற்றுப் பிழைக்கப் பார்க்கின்றன. பெரும்பாலும் இத்தகைய பாடல் போட்டி நிகழ்ச்சிகளில்அகலந்து கொள்ளும் நமது பிள்ளைகளைக் கொண்டு, இறந்து போன நமது போராளிகளையும், நடந்து முடிந்த போரினையும், போரின் பாதிப்புகளையும் வெளிப்படுத்தும் பாடல்களைப் பாட வைத்து, பொய் உணர்ச்சிகளை மிகையாய் வெளிபடுத்தி, அனுதாபம் தேடி, இலாபம் பார்க்க முயற்ச்சிக்கின்றார்கள் இவர்கள்.

இவர்களின் கையயப்பட்டு, பாடச் செல்லுகின்ற நமது பிள்ளைகளும் அவர்களது குடும்பத்தாரும், டீவிக்காரர்களின் வழிகாட்டலுக்கேற்ப, சோகமாய் நடிக்க முயல்வதைக் காண அருவருப்பாக இருக்கிறது. கில்மிசா 'கண்டா வரச் சொல்லுங்க' பாடலைப் பாடிய போது, அவரின் தாயார் அளவுக்கதிகமாக உணர்ச்சிகளைப் பொய்யாய் வெளிப்படுத்த முயன்று, அவர் செய்வது அத்தனையும் நடிப்பென்று உணர வைத்தார். இவர்களின் இந்தச் செயல், மறைந்த போராளிகளையும் முடிந்த போராட்டத்தையும் விற்கும் முயற்சியாய்ப் பட்டு மனவருத்தம் தந்தது. எதைத்தான் விற்றுப் பிழைப்பது என்று ஒரு வரையறை இல்லையா?

இதுவரை போராட்டத்தை விற்றுக் கொண்டிருந்தவர்கள், இம்முறை சற்று வித்தியாசமாக அசானியைப் பயன்படுத்தினர். ஆரம்பத்தில் அசானியின் வறுமையைக் காட்டி, முடிந்தளவு அனுதாபம் தேடி தமது வியாபாரத்தை நடாத்த முயன்ற இவர்கள். பின்னர் நமது மலையகத்தின் ஏழ்மையையும் அசானியின் ஊரின் கீழ்நிலையையும் காட்டி மேலும் கடை விரிக்க முயன்றார்கள். இவர்களின் அந்த நடிப்பு முயற்சிக்கு கில்மிசாவின் தாயார் தந்த அளவு அசானியின் குடும்பத்தாரின் ஒத்துழைப்புக் கிடைக்கவில்லை. நடிக்கத் தெரியாத



அந்த அப்பாவி மலையகப் பெற்றோரைக் காண இரக்கமாய் இருந்தது

டீவிக்காரர்கள் இதையெல்லாம் செய்ததை விட, நம்மவர்கள் சிலர் அவர்களின் அப் பொய் முயற்சிக்குத் துணை போனதைத்தான் சகிக்க முடியவில்லை. தொலைக்காட்சி முகப்பதிவிற்காக, புலம் பெயர் தேசத்திலிருந்தும் நம் யாழ்ப்பாணத்திலிருந்தும் அந் நிகழ்ச்சியில் கலந்து, 'கொடையாளராய்த்' தம்மை பதிவு செய்ய முயன்ற பிரமுகர்களின் செயலை ரசிக்க முடியவில்லை. zee தமிழில் அசானி பாடிய பிறகு தான் இவர்கள் அனைவருக்கும் மலையகத்தின் ஏழ்மைநிலை தெரிந்ததா? என்று கேட்க வேண்டி இருக்கிறது. போதாக் குறைக்கு மலையகத்தைச் சேரந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் அங்கு சென்று காட்டிய பரபரப்புச் செயல்கள் வெட்கப்பட வைத்தன. புகழ் நோக்கிச் சென்ற மற்றவர்கள், சில தர்மங்களையாவது செய்தனர். இவர் அதனையும் செய்யவில்லை. சமநிலையற்ற அந்த தலைவரது செயலில் புகழ் விருப்பம் மட்டுமே தங்கியிருப்பதாய்த் தோன்றியது.

நிகழ்ச்சியின் நடுவர்கள் கூட, வேண்டுமென்றே அசானியை ஊக்கப்படுத்த அவருக்கு பொய்மையாய்க் காட்டிய ஆதரவு, நிகழ்ச்சியின் நேர்மையை ஐயப்பட வைத்து, அவர்களின் தரத்தையும் தாழ்த்தியது மறுக்கமுடியாத உண்மை.

**சல்லடையாரின் சலிப்பு :- கசக்கும் உண்மை - வாரிதியார் அடி வாங்கப் போகிறார்.**

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

# சிவனொளிபாத மலை உச்சியில் இருந்து படிகளில் மழை வெள்ளமாகப் பாய்கிறது!

## உடன் மாற்று வடிகால் அமைக்கக் கோரிக்கை

(மஸ்கெலியா நிருபர் செ.தி.பெருமாள்)

மத்திய மலைநாட்டில் மாலை வேளையில் பெய்யும் கன மழையால் சிவனொளி பாதமலை உச்சியில் இருந்து படிகளில் அதிகளவில் மழை நீர் வடிந்து செல்லும் நிலையில் உள்ளது.

இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் கவனம் செலுத்தி படிக்கட்டு பகுதியில் வடிகால் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என யாத்திரிகர்கள் மற்றும் வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

கடந்த சில நாள்களாக பெய்து வரும் மழையால் மலைக்கு செல்லும் படிக்கட்டுகள் வழியாக நீர் வரத்து ஏற்பட்டு உள்ளது.

இந்த நிலையில் வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் அதிக அளவில் இரவு வேளையில் மலை உச்சிக்கு சென்று காலை வேளையில் சூரிய உதயம் பார்த்து விட்டு திரும்பி வரும் போது தவறுதலாக வழுக்கி விழும் அபாயம் உள்ளது.

அத்தோடு எதிர் வரும் டிசம்பர் மாதம் 26 ஆம் திகதி முதல் சிவனொளி பாதமலை பருவகாலம் ஆரம்பமாவதால் அதற்கு முன்னர் இந்த வடிகால் அமைப்பு செய்ய வேண்டும் எனக் கோரப்படுகின்றது.



# இலங்கை மீனவர்கள் யாழில் ஒன்றுகூடல்!



இலங்கையில் இருக்கின்ற கடற்றொழில் மாவட்டங்களை சேர்ந்த கடற்றொழிலாளர் அமைப்புக்களின் பிரதிநிதிகளின் கலந்துரையாடல் ஒன்று நேற்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

வடக்கு மாகாண கடற்றொழிலாளர்களுடைய அழைப்பை ஏற்று இலங்கையில் இருக்கின்ற கடலோர மாவட்டங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் தலைவர்கள், கிராமிய அமைப்புகளின் தலைவர்கள் இணைந்து யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் இந்தக் கலந்துரையாடலை நடாத்தினர்.

வடக்கு, கிழக்கு, தெற்கு மற்றும் மேற்கு என 4 திசைகளையும் இணைத்து ஒன்றுபட்டு எதிர்காலத்தில் ஒற்றுமையாக செயல்படுவதன் நோக்கமாகவே இந்த விசேட கலந்துரையாடல் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி அகிலன் கதிர்காமர், சமூக செயற்பாட்டாளர் செல்வின் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# கோட்டா மீது வழக்குப் போட தயாராகிறார் ரிஷாட் பதியுதீன்





நியாயமற்ற முறையில் தம்மை கைது செய்து தடுத்து வைத்தமைக்காக முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷ உட்பட அரச அதிகாரிகள் பலருக்கு எதிராகத் தாம் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளார் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

2024ஆம் ஆண்டுகான வரவு - செலவுத் திட்டத்தின் மூன்றாம் வாசிப்பு மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில் –

“முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பயங்கரவாத விசாரணைப் பிரிவின் (TID) பணிப்பாளருடன் இணைந்து தமது அரசியல் இலாபங்களுக்காக தம்மைக் கைதுசெய்து 5 வருடங்கள் சிறையில் வைத்திருக்க உத்தேசித்திருந்தார்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் (CID) அதிகாரிகள் தனக்கு எதிராக பொய்யான அறிக்கைகளை வழங்குமாறு பணிக்கப்பட்டிருந்தனர்.

ஆனால் அவர்கள் அவ்வாறு செய்ய மறுத்ததன் காரணமாக எனக்கு எதிராக பதிவு செய்யப்பட்ட அனைத்து வழக்குகளில் இருந்தும் விடுவிக்கப்பட்டேன்.

பயங்கரவாத விசாரணைப் பிரிவின் பணிப்பாளர் மற்றும் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உட்பட அனைத்து அதிகாரிகளுக்கும் எதிராக அடுத்த வாரம் வழக்குத் தாக்கல் செய்யத் திட்டமிட்டுள்ளேன். அத்துடன், வழக்குப்பதிவு செய்து அந்த நபர்களிடம் இழப்பீடு கோர உள்ளேன்.” என்றும் அவர் கூறியுள்ளார்.

# ஒளிப்பதிவாளர் சடலமாக மீட்பு

தனியார் தொலைக்காட்சி சேவையொன்றின் ஒளிப்பதிவாளர் ஒருவர் வெட்டுக் காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டமை தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

வெயங்கொட, கட்டுவஸ்கொட பகுதியில் இருந்தே இந்த ஒளிப்பதிவாளரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

அத்தனகல பகுதியில் வசிக்கும் ஒரு பிள்ளையின் தந்தையான ஒளிப்பதிவாளரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

வெட்டுக்காயங்களுடன் மீட்கப்பட்ட சடலம் வத்துப்பிட்டிவெல தள வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் வெயாங்கொடை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர

# நெல்லியடியில் புதனிரவு பெற்றோல் குண்டு வீச்சு!

நெல்லியடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புதுவளவு – கரவெட்டி பகுதியில் உள்ள வீடு ஒன்றின் மீது புதன் இரவு இனந்தெரியாதோரால் பெற்றோல் குண்டு தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலில் வீட்டில் உள்ள சொத்துக்கள் எரிந்து சேதமடைந்துள்ளன. இருப்பினும் உயிர்ச் சேதங்கள் எவையும் ஏற்படவில்லை.

வீட்டின் பின் பகுதியில் இருந்து பெற்றோல் குண்டு ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் குறித்து நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

நெல்லியடிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# யாழ். பல்கலை மாணவர்களுக்கு இந்திய அரசால் விசேட நிதியுதவி



**(எஸ்.நிதர்சன்)**

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர்கள் 100 பேருக்கு, இந்திய அரசால் வழங்கப்படவுள்ள நிதியுதவிச் செயற்றிட்டம் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.






















# இன்றைய ராசி பலன்கள் - 02.12.2023




இன்று நன்மை தீமை இரண்டும் கலந்து காணப்படும்.உரையாடலின் போது கவன மாக இருங்கள்.பயணங்கள்செய்ய வாய்ப்புள்ளது.

பணியிடத்தில் சிறப்பான பலன்களைக் காணலாம்.உங்களின் சிறிய முயற்சிகள் பெரும் வெற்றியை அளிக்கும்.

உங்கள் துணையுடன் சில பயனுள்ள விஷயங்களைப் பேசுவீர்கள். என்றாலும் பேச்சு ஆக்கபூர்வமாக இருக்கும் வகையிலும் உறவின் நல்லிணக்கத்தை பராமரிக்கும் வகையிலும் இருக்குமாறு பார்த்துக் கொள்ளுங்கள்.

இன்று கணிசமான தொகை உங்களிடம் காணப்படும். உங்கள் குடும்பத்தோடு பயணம் செல்ல நேரலாம். அதற்காக பணத்தை செலவு செய்வீர்கள்.

இன்று நீங்கள் ஆரோக்கியமாக காணப்படுவீர்கள். ஆரோக்கியத்தில் எந்தக் குறைபாடும் இருக்காது.




இன்ற உங்கள்ஆற்றலையும் வலிமை யையும் உணரும் நாள்.இன்று உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

கடினமான பணிகளைக் கூட இன்று நீங்கள் எளிதாகச் செய்வீர்கள். நீங்கள் பணிகளை திறம்பட கையாண்டு உங்கள் மேலதிகாரி களின் பாராட்டை பெறுவீர்கள்.

இன்று இருவரும் மனம் பொருந்தி ஒற்றுமையுடன் கானாப்படுவீர்கள். உங்கள் காதலின் எதிர்காலத்தை பற்றி கலந்தாலோசிபீர்கள்.

இன்று பண வரவு காணப்படுகின்றது. நீங்கள் எதிர் பாராத வகையிலிருந்து பணம் கிடைக்கும்.

ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும். தியானம் அல்லது யோகா மேற்கொள்வது உங்களுக்கு நல்லது.




இன்று சிக்கல் நிறைந்த நாளாக காணப்படும். வளர்ச்சி குறைந்து காணப் படும். இதனால் இன்று ஏமாற்றங்களும் நிறைந்து காணப்படும்.

உங்கள் சக பணியாளர்களிடம் அகந்தைப் போக்கை காண்பிப்பீர்கள். உங்கள் வளர்ச்சி குறித்து அவர்கள் சிறிது பொறாமைப் படுவார்கள்.

உங்கள் துணையுடன் சமூகமான உறவு காணப் படாது. நல்லுறவை பராமரிக்க சகஜமான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

இன்று பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. பணத்தை கவனமாகக் கையாள வேண்டும். சேமிப்பு குறைந்து காணப்படும். இன்று நிதி குறித்த எந்த முடிவையும் எடுக்க வேண்டாம்.

உயரமுத்தம் மற்றும் பதட்டம் காரணமாக தலைவலி ஏற்பட வாய்ப்புள்ளது.




நீங்கள் எந்த செயலை செய்தாலும் அதனை பொறுப்புடன் செய்வீர்கள். இதனால் வளர்ச்சியும் வெற்றியும் எளிதா கப் பெறுவீர்கள். இன்று முக்கிய முடிவு களை எடுக்கலாம்.

உங்கள் பணிகளை சாமர்த்திய மாக செய்வீர்கள்.தொழில் சார்ந்த அணுகுமுறை மேற் கொள்வீர்கள். பணிகளை எளிதாக முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் சகஜமான அணுகுமுறை மேற்கொண்டு நல்லுறவை ஏற்படுத்துவீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்றைய நாளை அதிக முயற்சி எடுக்க பயன் படுத்திக் கொள்ளுங்கள். இன்று ஊக்கத்தொகை கிடைக்க வாய்ப்புள்ளது.

இன்று அதிக ஆற்றலுடன் காணப்படுவீர்கள். இதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




உங்கள் இலக்குகளை அடைவ தற்கு சிறந்த நாள். எளிதாக உங்கள் இலக்குகளை அடைவீர்கள். அடிக்கடி பயணம் ஏற்படலாம். அது உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கலாம்.

உங்கள் பணியில் திறமைகளை வெளிப்படுத்துவீர்கள். இது உங்கள் மேலதிகாரிக ளால் பாராட்டப்படும். உங்கள் பணிகளை உற்சாகமாக செய்வீர்கள்.

உங்கள் இருவரிடம் காணப்படும் பரஸ்பர புரிந் துணர்வு காரணமாக உங்கள் துணையிடம் உங்கள் கருத்துக்களை மனம் திறந்து கூறுவீர்கள்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்கும். உங்களின் கடின உழைப்பிற்கு கூடுதல் பணம் ஊக்கத்தொகையாக கிடைக்கும்.

இன்று சுறுசுறுப்புடனும் ஆற்றலுடனும் காணப்படு வீர்கள். இதனால் ஆரோக்கியமாக காணப்படுவீர்கள்.




இன்று அதிக சிந்தனையுடன் காணப்படுவீர்கள். எந்த விஷயத்தை யும் லேசாக எடுத்துக் கொள்வதன் மூலம் வெற்றி காணலாம். அமைதி யாக இருக்கவேண்டும். தியானம் மேற் கொள்ள வேண்டும்.

பணி நிமித்தமான பயணங்கள் காணப்படும். அதிக பணிகள் காரணமாக சவாலான சூழ்நிலைகளை சந்திக்க நேரும். நீங்கள் சற்று சோர்வடைவீர்கள்.

உங்களிடம் காணப்படும் அகந்தை காரணமாக உங்கள் துணையுடன் தகவல் பரிமாற்ற பிரச்சினை காணப்படும். உங்கள் துணையுடன் நல்லுறவை பராமரிக்க இதனை தவிர்த்தல் வேண்டும்.

இன்று நிதிநிலைமை பலன் தரும் வகையில் சாதக மாக இருக்காது. தொலை தூர நிலுவைப் பணம் கிடைப் பதற்கு தாமதங்கள் ஏற்படும்.




அதிர்ஷ்டக் குறைவு காரணமாக கடைசி நிமிடத்தில் சிறந்த வாய்ப்பு களை இழப்பீர்கள். இது உங்களுக்கு கவலையை அளிக்கும். முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணிகளைக் கையாளும் போது ஸ்திரத்தன்மை இழந்து காணப்படுவீர்கள். சக பணி யாளர்கள் ஆதரவு கிட்டாது. மேலதிகாரிகளின் அங்கீ காரம் கிடைக்காது.

நீங்கள் உணர்ச்சி வசப்பட்ட நிலையில் இருப்பீர்கள். இது உங்கள் துணையுடனான உறவில் வெளிப்படும். உங்கள் துணையிடம் நட்பான அணுகுமுறை தேவை.

இன்று அதிக செலவுகள் காணப்படும். உங்கள் பொ– றுப்புகள் இன்று அதிகமாக காணப்படும். உங்களிடம் உள்ள குறைந்த பணத்தைக் கொண்டு பொறுப்புகளை நிறைவேற்ற இயலாது.




உங்கள் பொறுமை சோதனைக் குள்ளாகும் நாள். இன்று திட்டமிட்டு செயலாற்ற வேண்டியது அவசியம். பிரார்த்தனை மற்றும் பக்திப் பாடல்கள் கேட்பது உங்களுக்கு ஆறுதல் தரும்.

நீங்கள் குறித்த நேரத்தில் பணிகளை முடிக்க இயலாது. பணிகள் நிலுவையில் இருக்கும். அது உங்களுக்கு கவலையை அளிக்கும். சக பணியாளர் களிடமிருந்து வரும் வதந்திகளை நம்ப வேண்டாம்.

உங்கள் துணையுடன் நல்ல தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள், நீங்கள் இருவரும் வெளியிடங்களுக்கு செல்வதற்கான வாய்ப்பு உள்ளது. இதன் மூலம் உறவு மேம்படும்.

இன்று பணம் சம்பாதிக்க சாதகமான வாய்ப்புகள் கிடைக்கும். உங்கள் சேமிப்பு திறன் அதிகரிக்கும்.

உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துங்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 02.12.2023




இன்று குறைந்த செயலாற்றலுடன் காணப்படுவீர்கள். ஆன்மீக ஈடுபாடு மற்றும் பிரார்த்தனை மேற்கொள்வது நல்லது. தியானமும் மேற்கொள்ளலாம். பிறருடன் உரையாடும் போது கவனமாக உரையாடுங்கள்.

பணியில் உங்கள் பொறுப்புகளை சிறிது பதட்டத்துடன் கையாள்வீர்கள். இதற்கு எதிர்காலம் பற்றிய உங்கள் தேவையற்ற பயமே காரணம். அமைதியாக உற்சாகத்துடன் பணியாற்றுங்கள்.

கருத்து வேறுபாடு காரணமாக உங்கள் துணையுடன் ஈகோ பிரச்சினை ஏற்படும். அதனை தவிர்க்க வேண்டும். நட்பான அணுகுமுறை வேண்டும்.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். மேலும் உங்கள் சம்பாத்தியத்தை குடும்பத்தில் ஏற்படும் பொறுப்புகளுக்காக செலவு செய்ய நேரும்.




இன்று உங்கள் வளர்ச்சியில் சில தடைகள் காணப்படும். சிறப்பாக திட்டமிடுதல் மற்றும் யுக்திகளை கையாள்வதன் மூலம் வெற்றி பெறலாம். அமைதியாக இருந்து பதட்டத்தை தவிர்ப்பதன் மூலம் நன்மை கிடைக்கும்.

பணிகளை முன்கூட்டியே திட்டமிடுவதன் மூலம் தவறுகள் நேராமல் தடுக்கலாம். இதனால் உங்கள் பணியின் தரம் உயரும்.

உங்கள் துணையின் விருப்பபடி நடந்து கொள்வதன் மூலம் மகிழ்ச்சியை தக்க வைத்துக் கொள்ளலாம். வேறு விதமாக செயல்பட்டால் குழப்பமும் பதட்டமும் ஏற்படும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. என்றாலும் பூர்வீகச் சொத்து மற்றும் எதிர்பாராத வகையில் பணம் கிடைக்கும்.

இன்று ஆரோக்கியத்தில் பெரிய அளவிலான பிரச்சினைகள் ஏதும் இருக்காது.




இன்று நீங்கள் அதிகப் பணியில் மூழ்கி இருப்பீர்கள். புதிதாக ஒன்றை அடைவதில் உறுதியாக இருப்பீர்கள். கடினமாக உழைப்பதன் மூலம் வெற்றி காண்பீர்கள்.

பணியிடச் சூழல் சிறந்த செயல் திறன் ஆற்ற சாதகமாக இருக்கும். உங்கள் வேலைத் தரம் உங்களின் திறமையை பறைசாற்றும். நீங்கள் பணி சம்பந்தாமான சந்திப்பில் கலந்து கொள்வீர்கள். உங்கள் கருத்துக்களை தெளிவாக கூறுவீர்கள்.

உங்கள் துணையுடன் அன்பான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். எதிர்கால முடிவுகளைப் பற்றி கலந்தாலோசித்து பரஸ்பரம் ஒரு முடிவுக்கு வருவீர்கள்.

உங்கள் கடின உழைப்பின் மூலம் ஊக்கத்தொகை மற்றும் சலுகைகள் வகையில் பண வரவு காணப்படும். அது உங்களுக்கு உற்சாகத்தை அளிக்கும்.




இன்று உங்கள் செயல்களில் கவனமாக இருக்க வேண்டியது அவசியம். எதிர்மறை எண்ணங்களை வளர்த்துக் கொள்ளாதீர்கள். நம்பிக்கையுடனும் மகிழ்ச்சியுடனும் இருங்கள்.

பணியிடத்தில் அமைதியான சூழ்நிலை காணப்படாது. சக பணியாளர்கள் மற்றும் உங்கள் மேலதிகாரிகள் உங்களை புறக்கணிப்பது போலவும் தவிர்ப்பது போலவும் உணர்வீர்கள். உங்கள் பணிக்கு அங்கீகாரம் கிடைக்காது.

உங்கள் துனையிடத்தில் பொறுமையின்மையும் கவனமற்ற வார்த்தைகளும் இருவருக்குமிடையே மகிழ்ச்சியற்ற தன்மையை ஏற்படுத்தும். இத்தகைய நடத்தையை தவிர்ப்பதன் மூலம் மகிழ்ச்சியை அனுபவிக்கலாம்.

பணப்புழக்கம் குறைவாக இருக்கும். தேவையற்ற செலவுகள் ஏற்படும்.

